# தூத்துக்குடியில் நெய்தல் கலை திருவிழா முன்னேற்பாடு பணிகள் : கனிமொழி எம்.பி.ஆய்வு



தூத்துக்குடி.அக்.06-

தூத்துக்குடியில் 3வது நெய்தல் கலை திருவிழா முன்னேற்பாட்டுப் பணிகளை கனிமொழி எம்.பி நேரில் ஆய்வு செய்தார்.

தமிழர்களின் பண்பாடு, கலை, நாகரிகம் போன்றவற்றைப் பறைசாற்றும் வகையில் கனிமொழி கருணாநிதி முன்னெடுப்பில் தூத்துக்குடி சங்கரபேரி சாலைப் பிரிவில் உள்ள திடலில் அக்.11 ஆம் முதல் 13ஆம் தேதி வரை 3வது நெய்தல் கலைத் திருவிழா தொடங்கவுள்ளது. அதற்காக நடைபெற்றுவரும் முன்னேற்பாட்டுப் பணிகளை இன்று கனிமொழி எம்பி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது, மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாநகராட்சி ஆணையர் மதுபாலன், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தார்.

நெய்தல் கலைத் திருவிழாவில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்து 300க்கும்- மேற்பட்ட நாட்டுப்புறக் கலைஞர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்த உள்ளனர். இந்த விழா அக்டோபர் 11ம் தேதி முதல் அக்டோபர் 13ம் தேதி வரை மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை நடைபெறும். கரகாட்டம், மயிலாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், பறையாட்டம், குச்சியாட்டம், துடும்பாட்டம், ஜிம்பளா மேளம், பொய்க்கால் குதிரை, கிராமிய நிகழ்ச்சி உள்ளிட்ட 30-க்கும் மேற்பட்ட கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நெய்தல் திருவிழாவின் ஒரு பகுதியாகத் தூத்துக்குடியின் சிறப்பு உணவுகளுடன் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியைச் சேர்ந்த பாரம்பரிய உணவு வகைகளையும் அறிந்து கொள்ளும் வகையில் 40க்கும் மேற்பட்ட அரங்குகள் காட்சிப்படுத்தப்பட உள்ளது.

# தன்னம்பிக்கையோடு செயல்பட வேண்டும் : வேலைவாய்ப்பு முகாமில் இளைஞர்களுக்கு அமைச்சர் பி.கீதாஜீவன் அறிவுரை



தூத்துக்குடி.அக்.06-

இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் எந்தஒரு செயல் செய்வதாக இருந்தாலும் தன்னம்பிக்கையோடு செய்ய வேண்டும் என்று அமைச்சர் பி.கீதாஜீவன் அறிவுரை வழங்கினார்.

தூத்துக்குடி வ.உ.சி கலைக் கல்லூரியில் இன்று மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக/நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் நேர்முகத்தேர்வு மூலமாக தெரிவு செய்யப்பட்ட வேலைநாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதாஜீவன், மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், தலைமையில் வழங்கி தெரிவித்ததாவது:

படித்து முடித்த இளைஞர்கள் தங்களுக்கு நல்ல ஊதியத்தில் பணி கிடைக்கப் பெற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதே அவர்களது வாழ்நாள் இலட்சியமாகும். அத்தகைய இளைஞர்களின் நலனில் பெரிதும் அக்கறைகொண்டு, அவர்களின் முன்னேற்றத்திற்காக முழு வீச்சில் செயல்படும் தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் தனியார் துறையில் பணிநியமனம் பெறும் வகையில் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் வாயிலாக தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் சிறிய மற்றும் பெரிய அளவில் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் சிறிய அளவில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. 6 மாதத்திற்கு ஒரு முறை பெரிய அளவில் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இதுபோன்ற முகாம்கள் நடத்தப்படுகின்றன.

தூத்துக்குடி ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரியில் 17.02.2024 அன்று நடைபெற்ற மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் 80 வேலையளிக்கும் நிறுவனங்களும் 1150 வேலைநாடுநர்களும் கலந்து கொண்டனர். இதில் 133 வேலைநாடுநர்கள் தேர்வு செய்யப்பட்டு, பணி நியமனம் பெற்றனர். தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைவாய்ப்பு முகாமில் 143 தனியார்துறை நிறுவனங்களும், 10 திறன்பயிற்சி நிறுவனங்களும் கலந்து மேற்பட்ட 5000க்கும் கொண்டு காலிப்பணியிடங்களுக்கு வேலைநாடுநர்களை தேர்வு செய்ய உள்ளனர். மேலும், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு தயாராகிவரும் இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களை ஊக்குவிக்கும் விதமாக மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வைத்து TNPSC, SSC, TNUSRB, TRB போன்ற பல்வேறு வகையான போட்டித்தேர்வுகளுக்கு இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி வகுப்புகளில் நேரடியாக கலந்து கொள்ள இயலாத மற்றும் கட்டணம் செலுத்தி போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளில் சேர இயலாத ஏழை எளிய இளைஞர்கள், இளம்பெண்களின் அரசுப் பணி கனவை நனவாக்கும் வகையில், வீட்டிலிருந்தபடியே போட்டித்தேர்வுகளுக்கு தயாராகும் விதமாக இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாட்டில் கல்வித்தொலைக்காட்சி வாயிலாக போட்டித்தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகளை ஒளிப்பரப்பும் திட்டத்தை நமது தாயுள்ளம் கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் 20.03.2022 அன்று துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியானது கல்வித்தொலைக்காட்சியில் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 07.00 மணிமுதல் 09.00 மணிவரையும் மற்றும் மறுஒளிபரப்பு இரவு 07.00 மணிமுதல் 09.00 மணி வரையும் ஒளிபரப்பு செய்யப்படுகிறது. தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் செயல்படும் தன்னார்வ பயிலும் வட்டத்தின் வாயிலாக நடைபெறும் இலவசப் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு பயிற்சி பெற்று 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் டி.என்.பி.எஸ்.சி குரூப் IV தேர்வில் 8 நபர்களும், குரூப் II A தேர்வில் 7 நபர்களும், தமிழ்நாடு அரசு சீருடைப் பணியாளர் தேர்வில் 21 நபர்களும், பணியாளர் தேர்வு ஆணைய தேர்வில் 20 நபர்களும், பெடரல் பேங்க் தேர்வில் 1 நபரும், தமிழ்நாடு அரசு சீருடைப் பணியாளர் துணை ஆய்வாளர் தேர்வில் 2 நபர்களும், டி.என்.பி.எஸ்.சி குரூப் ஐஐ முதல்நிலைத் தேர்வில் 2 நபர்களும் தேர்ச்சி பெற்று பயனடைந்துள்ளனர்.

போட்டித் தேர்விற்கு தயாராகும் போட்டியாளர்கள் இலவச பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அந்தவகையில், இளைஞர்களின் நலனில் பெரிதும் அக்கறைகொண்டு செயல்பட்டுவரும் தமிழ்நாடு முதலமைச்சர் இளைஞர்கள் மற்றும் இளம்பெண்களின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு பல்வேறு திட்டங்கள் தொடர்ந்து அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அதன்ஒரு பகுதியாக, இன்று நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 96 வேலையளிக்கும் நிறுவனங்கள் வந்திருக்கிறார்கள். கடந்த முறை 1150 பேர் நம்முடைய இளைஞர்கள் மற்றும் இளம்பெண்கள் கலந்து கொண்டார்கள். ஆனால் 133 பேர் தான் பணியில் சேர்ந்துள்ளார்கள். காரணம் என்னவென்றால் வெளியூர் வெளி மாவட்டங்களுக்குச் சென்று பணி செய்வதில் தயக்கம் காட்டுகிறார்கள். நம்முடைய இளைஞர்கள் மற்றும் இளம்பெண்களுக்கு கூற விரும்புவது என்னவென்றால் நிறுவனங்களில் வேலைவாய்ப்புக்கு போறதாக இருந்தாலும் சரி, தனியாக சுயதொழில் தொடங்கினாலும் சரி அல்லது இரண்டு மூன்று நபர்கள் சேர்ந்து ஒரு தொழில் தொடங்கினாலும் சரி சிரமங்கள், சிக்கல்கள் வருவது இயல்பு. அதனை நாம் எதிர்கொண்டு வெற்றி பெற்றுவிடலாம் என்று தன்னம்பிக்கை இருக்க வேண்டும்.

எனவே, தங்களது திறமைக்கு ஏற்றார்போல் ஏதாவது ஒரு நிறுவனத்தில் பணியில் சேர்ந்து உங்களது பெற்றோர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் பெண்கள் அதிகளவில் தொழில் தொடங்கி தொழில் முனைவோர்களாக உருவாக வேண்டுமென்று நோக்கில் மானியமாக தொழிற்கடன் என்றெல்லாம் திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறார்கள். அதுபோல, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு தேவையான கடனுதவிகள், உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கான பயிற்சிகள், மதிப்புக் கூட்டுப் பொருட்களாக மாற்றி சந்தைப்படுத்துதல் என மகளிர் நலன்;காக்கும் வகையில் திட்டங்களை வகுத்து பெண்களின் வேலைத்திறன் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பயன் படுத் திக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு செயலாற்றி வருகிறார்கள். இளைஞர்களுக்கு நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக திறன் மேம்பாட்டுப் பயிற்சி எல்லாம் வழங்கப்படுகிறது. தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க்கக்கூடிய தனித்திறமைகளை இளைஞர்களிடையே எதிர்கால தமிழ்ச் சமுதாய இளைஞர்களிடையே உருவாக்கிட வேண்டுமென்ற அடிப்படையில் தான் இதுபோன்ற பயிற்சி எல்லாம் வழங்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு, UPSC, TNPSC, SSC, TNUSRB, TRB போன்ற போட்டித்தேர்வுகளுக்கு தேவையான இலவசப் பயிற்சி வகுப்புகளை நடத்தி, அவர்களுக்கு தேவையான நிதியுதவியும் அளித்து வருகிறது.

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு எதிர்கால சந்ததியினர்களாகிய, எதிர்கால தலைவர்களாகிய இளைஞர்களை அனைத்து திறமைகளையும் பெற்றவர்களாக உருவாக்கிட வேண்டுமென்றும், அவர்களின் மனித்திறமைகளையும், தனித்திறமைகளையும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற உன்னத நோக்கத்தோடு பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது.

எனவே, உங்களுடைய குடும்ப நலனை மனதில் வைத்துக்கொண்டு, இளைஞர்கள் இளம்பெண்கள் ஒவ்வொருவரும் படித்து முடித்து ஏதாவது ஒரு நிறுவனத்திலோ அல்லது சுயதொழில் தொடங்கியோ அதிகப்படியான வருமானம் ஈட்டி வாழ்க்கையில் வெற்றி பெற வாழ்த்துகள் என சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பி.கீதாஜீவன் தெரிவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மூலமாக நடத்தப்படும் போட்டித் தேர்;வுகளுக்கான இலவசப் பயிற்சி வகுப்புகளில் கலந்துகொண்டு பயிற்சி பெற்று, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக நடத்தப்பட்ட போட்டித்தேர்வுகளில் வெற்றிபெற்றவர்களுக்கு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதாஜீவன் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தார். முன்னதாக, மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் பல்வேறு முன்னணி தொழில் நிறுவனங்கள் கலந்துகொண்டு வேலைநாடுநர்களை நேர்முகத் தேர்வு மூலமாக தேர்வு செய்யும் பணிகளை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன், மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், தலைமையில் பார்வையிட்டார்கள்.

இம்முகாமில், தூத்துக்குடி மாநகராட்சி துணை மேயர் செ.ஜெனிட்டா, திட்ட இயக்குநர் (த.மா.ஊ.வா.இ) பெ.மல்லிகா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் சை.சைய்யது முகம்மது, உதவி இயக்குநர் (திறன் மேம்பாட்டு பயிற்சி) ஏஞ்சல் விஜய நிர்மலா, பொது மேலாளர் (மாவட்ட தொழில் மையம்) ஸ்வர்ணலதா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் விக்னேஸ்வரன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பிரம்மநாயகம், அரசு அலுவலர்கள் உட்பட இளைஞர்கள், இளம்பெண்கள் பலர் கலந்து கொண்டனர்.

தென்காசி வழியாக

# மும்பையில் இருந்து தூத்துக்குடிக்கு தீபாவளி சிறப்பு ரயில் இயக்க எம்.பி. ராணி ஸ்ரீ குமார் கோரிக்கை

தென்காசி அக்.06:

மும்பை வாழ் தென் மாவட்ட தமிழ் மக்களின் தொடர் கோரிக்கையை ஏற்று மும்பையில் இருந்து கொல்லம், தென்காசி, திருநெல்வேலி வழியாக தூத்துக்குடிக்கு சிறப்பு ரயிலை இயக்குமாறு தென்னக ரயில்வே பொது மேலாளருக்கும், மத்திய ரயில்வே பொது மேலாளருக்கும் தென்காசி எம்பி ராணி ஸ்ரீ குமார் கோரிக்கை விடுத்துள்ளார். அவர் கொடுத்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது



தென்காசி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடியை பூர்வீகமாக கொண்ட தமிழர்கள் தங்கள் குடும்பத்தினரோடு மும்பையில் வசித்து வருகின்றனர்.

பண்டிகை காலங்களில் தங்களுடைய சொந்த ஊர்களுக்கு வந்து உறவினர்களோடு கொண்டாடுவது வழக்கம்.

மேலும் தொழில் மற்றும் வேலை நிமித்தமாகவும் பலர் தென் மாவட்டங்களில் இருந்து மும்பைக்கு பயணிக்கின்றனர். தென் மாவட்டங்களில் இருந்து மும்பைக்கு செல்லும் ரயில்களிலும் மற்றும் மும்பையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு இயக்கப்படும் ரயில்களிலும் முன்பதிவு இருக்கைகள் முழுவதும் காலியாகி காத்திருப்பு பட்டியலில் உள்ளது.

தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களுக்கு இதுவரை மும்பைக்கு செல்ல நேரடி ரயில் சேவைகள் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மும்பையில் இருந்து தூத்துக்குடிக்கு சிறப்பு ரயிலை இயக்கும் பொழுது ரத்தினகிரி, மங்களூர், கொல்லம், புனலூர், தென்காசி, பாவூர்சத்திரம், அம்பை, நெல்லை வழியாக இயக்க வேண்டும். இதன் மூலமாக தென்காசி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களுக்கு முதன் முதலில் மும்பைக்கு நேரடி ரயில் சேவை கிடைப்பதுடன் மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களின் முக்கிய நகரங்களுக்குச் செல்லவும் ரயில் சேவை கிடைக்கும்.

மிக முக்கியமான திருத்தலமான சபரிமலை ஐயப்ப சுவாமி திருக்கோவிலானது கேரள மாநிலத்தின் புனலூர் ரயில் நிலையத்தின் அருகாமையில் இருப்பதால் கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் தமிழக மக்களுக்கும் ஐயப்ப சுவாமி திருக்கோவிலுக்குச் சென்று வர மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

மேலும் தென்னிந்தியாவின் காசி எனப்படும் தென்காசி அருள்தரும் காசி விஸ்வநாதர் திருக்கோவிலுக்கும் பாவங்களை போக்கிடும் பாபநாசநாதர் திருக்கோவிலுக்கும் அறுபடை வீடுகளில் மிக முக்கியமான திருத்தலமான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலுக்கும் ரயில் சேவையானது கிடைக்கும். எனவே இந்த சிறப்பு ரயிலை பயணிகள் நலன் கருதி உடனடியாக இயக்குமாறு அவர் தன்னுடைய கோரிக்கை மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

கோவில்பட்டி வேலாயுதபுரத்தில்

# தடுப்பூசி முகாம் : நகராட்சி சேர்மன் கருணாநிதி தொடங்கி வைத்தார்



கோவில்பட்டி அக் 06

கோவில்பட்டி நகராட்சிக்குட்பட்ட 5வது வார்டு பகுதியான வேலாயுதபுரத்தில் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி பெண் தாய்மார்களுக்கான தடுப்பூசி மையம் திறப்பு விழா நடைபெற்றது.

வேலாயுதபுரம் பேருந்து நிறுத்தம் அருகே வேலாயுதபுரம் நாடார் உறவின்முறை சங்கத்துக்கு சொந்தமான வளாகத்தில் உள்ள கட்டிடம் கோவில்பட்டி நகராட்சியின் தடுப்பூசி மையம் அமைப்பதற்கு வழங்கப்பட்டுள்ளது. அதைத்தொடர்ந்து நடைபெற்ற தடுப்பூசி மையம் திறப்பு விழாவுக்கு வேலாயுதபுரம் நாடார் உறவின்முறை சங்க தலைவர் ஆர்.வீ.எஸ். வேல் முருகேசன் நாடார் தலைமை வகித்தார். 5வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் லவராஜா, நாடார் உறவின் முறை சங்க துணைத் தலைவர் ஏ.ஆர்.வி. அழகுவேல் (எ) சண்முகராஜ் நாடார், செயலாளர் எஸ். சண்முகராஜா நாடார், துணை செயலாளர் வள்ளியப்பராஜ் நாடார் பொருளாளர் குமார் நாடார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கோவில்பட்டி நகராட்சி சேர்மன் கா.. கருணாநிதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தடுப்பூசி மையத்தை திறந்து வைத்து குத்துவிளக்கேற்றி பணிகளை துவக்கி வைத்தார். தொடர்ந்து குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கான ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கி உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் வேலாயுதபுரம் நாடார் உறவின்முறை கமிட்டி உறுப்பினர்கள் சக்தி விநாயகம் நாடார், மணிக்குமார் நாடார், சேர்முகச்சாமி நாடார், ஆனந்த் நாடார், திமுக நிர்வாகிகள் சேதுரத்தினம், ரவீந்திரன், கோவில்பட்டி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் பாக்கியாத்து சாலிகா மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் குரூப் 2 முதன்மை தேர்வுக்கு இலவச பயிற்சி: கலெக்டர் க. இளம்பகவத் தகவல்

தூத்துக்குடி.அக்.06-

தூத்துக்குடியில் குரூப் 2 மற்றும் 2A முதன்மை தேர்வுக்கான நேரடி இலவச பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சியர் க. இளம்பகவத் தெரிவித்துள்ளார.

இதுகுறித்து ஆட்சியர் வெளியிட்ட செய்திக்குறிப்பில், "தூத்துக்குடி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக தன்னார்வ பயிலும் வட்டம் வாயிலாக மாநில அரசால் அறிவிக்கப்படும் TNPSC, TNUSRB மற்றும் TRB ஆகிய போட்டித் தேர்வுகளுக்கு கட்டணமில்லாத பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

தற்போது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் TNPSC Group- II தொகுதி II-ல் துணை வணிகவரி அலுவலர், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர், சார் பதிவாளர்(நிலை-II) உள்ளிட்ட பதவிகளில் 507 பணியிடங்களுக்கும் மற்றும் தொகுதி- IIA-ல் தணிக்கை ஆய்வாளர், முதுநிலை ஆய்வாளர்(கூட்டுறவுத் துறை) உள்ளிட்ட பதவிகளில் 1820 பணியிடங்களுக்கும் அறிவிப்பு 20.06.2024 அன்று வெளியிடப்பட்டது. கல்வித்தகுதி ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு ஆகும். இந்த TNPSC Group- II (தொகுதி II மற்றும் IIA பணிகள்) காலிப்பணியிடங்களுக்கான முதல்நிலைத் தேர்வானது (Prelims) 14.09.2024 அன்று தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. கூடுதல் விவரங்களை https://www.tnpsc.gov.in என்ற இணையதளத்தில் அறியலாம். இத்தேர்வு எழுதி முதன்மைதேர்வுக்கு (Mains) தயாராகும் தூத்துக்குடி மாவட்ட தேர்வர்கள் பயன் பெறும் பொருட்டு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் தன்னார்வ பயிலும் வட்டம் வாயிலாக, ஒருங்கிணைந்த இலவச நேரடி பயிற்சி வகுப்புகள் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், கோரம்பள்ளம் தூத்துக்குடியில் 09.10.2024 (புதன் கிழமை) காலை 10.00 மணிக்கு தொடங்கப்படவுள்ளது. இப்பயிற்சி வகுப்புகள் சிறந்த பயிற்றுநர்களை கொண்டு நடத்தப்படும்.

மேலும் வாரம் தோறும் மாதிரி தேர்வுகளும் நடத்தப் படும். இப்போட்டித் தேர்வுக்கு தேவையான அனைத்து புத்தகங்களும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக நூலகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்த இலவச பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விருப்பம் உடையவர்கள் 0461 - 2003251 என்ற தொலைபேசி எண் வாயிலாகவோ அல்லது மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையத்திற்கு நேரில் வந்து பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

TNPSC Group- II-2024 (தொகுதி II மற்றும் IIA பணிகள்) முதன்மை தேர்வுக்கு தயாராகும் தேர்வர்கள் இப்பயிற்சி வகுப்பில் கலந்துக்கொண்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் தெரிவித்துள்ளார்.

# ஆதரவற்ற பெண்களுக்கு நாட்டின கோழிக்குஞ்சுகள் மானியத்தில் வழங்கப்பட உள்ளது: கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்

தென்காசி அக்.06:

2024-25 ஆம் ஆண்டில்" ஏழ்மை நிலையில் உள்ள கணவனை இழந்த கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு நாட்டின கோழிக்குஞ்சுகள் (ஒரு பயனாளிக்கு40 கோழிக்குஞ்சுகள் வீதம்) 50 விழுக்காடு மான்யத்தில் வழங்கும் திட்டம் தென்காசி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. தேர்வு செய்யப்பட வேண்டிய பயனாளிகளின் தகுதிகள்-தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளி ஏழைப் பெண்ணாக இருக்க வேண்டும். விதவைகள், ஆதரவற்றோர் மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளி அந்த கிராமத்தில் நிரந்தரமாக வசிப்பவராகவும், கோழி வளர்ப்பில் ஆர்வம் கொண்டவராகவும் இருக்கவேண்டும். பயனாளி சொந்தசெலவில் ரூ.3200/- செலவில் கொள்முதல் செய்திட திறன் பெற்றவராக இருக்க வேண்டும். சுய சான்று வழங்கிய ரசீது சமர்ப்பிக்கப்பட்டவுடன் 50 % மானியம் வங்கி கணக்கில் செலுத்தப்படும். தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் பதிவு செய்யப்பட்ட சுய உதவி குழுக்களை சேர்ந்த பெண்களுக்கு முனனுரிமை அளிக்கப்படும். பயனாளி முந்தைய ஆண்டுகளில் இலவச கறவை மாடு, ஆடு / செம்மறியாடு திட்டம் அல்லது கோழிப்பண்ணை திட்டங்களால் பயனடைந்திருக்க கூடாது. தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளில் 30% பேர் SC/ST பிரிவை சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட கால்நடை மருந்தககால்நடைஉதவிமருத்துவர்களைஅணுகி உடன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவேண்டும்என மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், தெரிவித்துள்ளார்.

சாம்சங் தொழிலாளர்கள், நிறுவனத்துடன்

# 3 தமிழக அமைச்சர்கள் நாளை பேச்சுவார்த்தை

சென்னை, அக். 06-

சாம்சங் தொழிலாளர்கள் போராட்டத்தில் விரைந்து தீர்வு காண முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியதை அடுத்து நாளை 3 தமிழக அமைச்சர்கள் சாம்சங் நிறுவனம் மற்றும் தொழிலாளர்கள் உடன் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூரில் சாம்சங் எலெக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தின் உற்பத்தி ஆலை ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் கடந்த 9-ம் தேதி முதல் ஆலைக்கு அருகே போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதிக சம்பளம், பணிநேரம் குறைப்பு மற்றும் ஆலையில் சங்கத்திற்கான அங்கீகாரம் ஆகியவற்றை வலியுறுத்தி போராட்டம் நடந்து வருகிறது. போராடும் தொழிலாளர்கள் பணிக்கு திரும்ப வேண்டும் என ஆலை நிர்வாகம் தெரிவித்தது. அவர்கள் வேலைக்கு வராவிட்டால் சம்பளம் பிடித்தம் மற்றும் பணி நீக்கம் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என சாம்சங் நிறுவனம் தெரிவித்தது. இருப்பினும் தொழிலாளர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், சாம்சங் தொழிலாளர்கள் போராட்ட விவகாரத்தில் விரைந்து தீர்வு காண வேண்டும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தி உள்ளார். ஏற்கனவே நடைபெற்ற பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டப்படாத நிலையில், அமைச்சர்கள் டிஆர்பி. ராஜா, தா.மோ.அன்பரசன், கணேசன் ஆகியோர் தலையிட்டு தீர்வு காண முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார். சாம்சங் நிறுவனம் மற்றும் தொழிலாளர்கள் உடன் நாளை அமைச்சர்கள் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளனர்.

காஷ்மீரில் ஊடுருவ முயற்சி முறியடிப்பு:

# 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

ஜம்மு, அக். 06-

ஜம்மு காஷ்மீர் எல்லையில் ஊடுருவ முயன்ற 2 பயங்கரவாதிகளை ராணுவ வீரர்கள் சுட்டுக்கொன்றனர்.

இது தொடர்பாக ஸ்ரீநகரை தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் சினார் கார்ப்ஸ் ராணுவப் பிரிவு வெளியிட்டுள்ள டுவிட்டர் தள பதிவில் கூறப்பட்டிருப்பதாவது, ஜம்மு காஷ்மீரின் குப்வாரா மாவட்டத்தில் குகல்தார் என்ற பகுதியில் பயங்கரவாதிகள் ஊடுருவ முயல்வதாக கிடைத்த ரகசிய தகவலை அடுத்து இந்திய ராணுவமும், ஜம்மு காஷ்மீர் காவல்துறையும் இணைந்து நடவடிக்கையைத் தொடங்கின.

சந்தேகத்திற்கிடமான செயல்பாட்டைக் கண்டறிந்த பாதுகாப்புப் படையினர், அவர்களுக்கு சவால் விடுத்தனர். இதையடுத்து, பயங்கரவாதிகள், பாதுகாப்புப் படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். எச்சரிக்கை அடைந்த பாதுகாப்புப் படையினர், திறம்பட துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இந்த தாக்குதலில் இரண்டு பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து அங்கு நடத்தப்பட்ட சோதனையில், பயங்கரவாதிகளின் ஆயுதக் கிடங்கு கண்டுபிடிக்கப்பட்டு அவை பறிமுதல் செய்யப்பட்டன. தொடர்ந்து தேடுதல் வேட்டை நடைபெற்று வருகிறது என்று அந்த பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் குற்றால அருவிகளில் குளித்து மகிழ்ந்தனர்.

## தென்காசி ஆட்டோ ஓட்டுனர்கள் மற்றும் உரிமையாளர்கள் நலச்சங்கம் சார்பில் சரஸ்வதி, ஆயுத பூஜை விழா வரும் 11ம் தேதி நடக்கிறது

**தென்காசி அக்.06:**
தென்காசி ஜெய்ஹிந்த் நடுபல்க் ஆட்டோ ஓட்டுனர்கள் மற்றும் உரிமையாளர்கள் நலசங்கம் மற்றும் விவேகானந்தா இரத்ததான கழகம் இணைந்து நடந்தும் 34 வது ஆண்டு சரஸ்வதி பூஜை மற்றும் ஆயுத பூஜை விழா வரும் அக்.11 அன்று தென்காசி நடுபல்க் ஆட்டோ ஸ்டாண்ட் முன்பு வைத்து நடைபெறுகிறது. காலை 5 மணிக்கு கணபதி ஹோமம், 7 மணிக்கு கபசுரகுடிநீர் வழங்குதல், 10 மணிக்கு நீர் மோர் வழங்குதல், 11 மணிக்கு இரத்தம் கண்டறியும் முகாம், 12 மணிக்கு மரக்கன்றுகள் நடுதல் மற்றும் மரக்கன்றுகள் வழங்குதல், மதியம் 1 மணிக்கு அன்னதானம் நடைபெறுகிறது மதியம் 3 மணிக்கு மூன்று சக்கர சைக்கிள் வழங்குதல், மாலை 4 மணிக்கு சிறுவர்களுக்கான விளையாட்டு போட்டிகள், இரவு 8 மணிக்கு சிறப்பு பூஜையும் நடைபெறுகிறது. நிகழ்ச்சியில் அனைவரும் கலந்து கொண்டு அம்மன் அருள் பெற விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# தென்காசியில் அனைத்து துறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம்

### மாவட்ட கண்காணிப்பு அலுவலர், கலெக்டர் பங்கேற்பு



**தென்காசி அக்.06:**
அனைத்துதுறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்விச்சேவைகள் கழகம் சங்கர் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், முன்னிலையில் நடைபெற்றது.தென்காசி மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், பல்வேறு துறைகள் சார்ந்த திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து, அனைத்துதுறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்விச் சேவைகள் கழகம் சங்கர் தலைமையில், மாவ்ட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், முன்னிலையில் நடைபெற்றது.பின்னர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் பேசியதாவது;

தமிழகத்தில் வட கிழக்குப் பருவமழை தொடங்கவுள்ள நிலையில் அனைத்து துறை அலுவலர்களும் பேரிடர் காலங்களில் பொதுமக்களுக்குத் தேவையான முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள வேண்டும். அடிப்படை வசதிகளான கழிப்பிட வசதி, இருப்பிடவசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட வசதிகளை ஆய்வு செய்து பொது மக்களுக்குத் தேவையானஅனைத்து வசதிகளையும் செய்து தரவேண்டும். பேரிடர் காலங்களில் பொதுமக்கள் செய்யக் கூடியவை, செய்யக்கூடாதவை பற்றி அறிவுரை வழங்க வேண்டும். அவசர கால கட்டுப்பாட்டுஎண் 1077 என்ற கட்டணமில்லா எண்ணை தொடர்பு கொள்ள வேண்டி விழிப்புணர்வு பதாகைகளை பொதுமக்கள் அறிந்திடும் வகையில் அமைத்திட வேண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலககட்டுப்பாட்டு அறையில் 24 மணிநேரமும் அலுவலர்களை நியமனம் செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனுக்காக எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்;. இத்தகைய திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சரால் மாவட்ட வளர்ச்சிப் பணிகளை துரிதப்படுத்திடவும், பொதுமக்களுக்கு சென்றடைய வேண்டிய நலத் திட்ட உதவிகளை கண்காணித்திடவும், இயற்கை பேரிடர் காலங்களில் மாவட்ட ஆட்சித்தலைவருடன்; ஒருங்கிணைந்து பணியாற்றிடவும், மாவட்டத்தில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் உள்ளிட்ட பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்காக, மாவட்ட கண்காணிப்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்;. அந்த வகையில் பல்வேறு துறைகள் சார்ந்த திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து, அனைத்துதுறை உயர் அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சரின் 'மக்களுடன் முதல்வர,;'' முதலமைச்சரின் முகவரி, பட்டா மாற்றம், உங்களைத் தேடி உங்கள் ஊரில், முகாம்களில் பொது மக் க ளி ட மி ருந்து பதிவு செய்யப்பட்டுள்ள கோரிக்கை மனுக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், தமிழ்நாடு முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்ட 'தமிழ்ப் புதல்வன்'' திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவது குறித்தும், போதை விழிப்புணர்வு தடுப்பு குறித்தும், பெண்கள் பாதுகாப்பு குறித்தும், பழைய வீடுகளை புதுப்பித்துத் தரும் திட்டம் குறித்தும்,கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள பயனாளிகள் குறித்தும், சாலைவசதி, குடிநீர் வசதி குறித்தும், நமக்கு நாமே திட்டம் குறித்தும், ஆதிதிராவிடர் நலத்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் விடுதிகள் குறித்தும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் செயல்பட்டு வரும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ள மாணாக்கர்களின் விபரங்கள் குறித்தும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும், ஊரகப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிகளின் செயல்பாடுகள் மற்றும் விநியோகம் செய்வது குறித்தும், பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் விலையில்லா மிதி வண்டிகள் விநியோகிக்கப்பட்டு வருதல் குறித்தும் மற்றும் பள்ளிக்கல்வித் துறையில் மாணாக்கர்களின் பள்ளி சேர்க்கைகள் குறித்தும் நான் முதல்வன் உயர்வுக்குப் படி திட்டம் குறித்தும், விவசாயிகளுக்கு வழங்கப்படும் திட்டங்கள் குறித்தும், கூட்டுறவுத்துறையின் மூலம் தொழில் முனைவோருக்கு வழங்கப்படும் கடன்கள் குறித்தும், சிறு, குறு தொழில் முனைவோhர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

எனவே, தமிழக அரசின் இதுபோன்ற திட்டங்களை, பொதுமக்களிடம் முறையாக கொண்டு சேர்த்து பயனடையும் வகையில், அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் ஒன்றிணைந்து செயல்பட்டு, தென்காசி மாவட்டத்தை வளர்ச்சிமிக்க மாவட்டமாக மாற்றிட வேண்டும் எனவும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஃ தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்விசேவைகள் கழகம் சங்கர் பேசினார்.

இந் நி கழ் வு க ளில், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் வேணுகோபால், மாவட்ட ஊரகவளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மைக்கேல் அந்தோணி பெர்னாண்டோ மற்றும் அனைத்துத்துறை அரசு உயர் அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளியில் நவராத்திரி 3ம் நாள் விழா



**குற்றாலம் அக்.06:**
இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளியில் நவராத்திரியின் மூன்றாம் விழா கொண்டாடப்பட்டது.விழாவிற்கு பாரத் கல்விக் குழுமத் தலைவர் மோகனகிருஷ்ணன் மற்றும் செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன் தலைமை தாங்கினார்.பள்ளி முதல்வர்கள் கிஃப்ட் சன் கிருபாகரன் மற்றும் வனிதா முன்னிலை வகித்தனர்.மாணவி அன்பு ஶ்ரீ நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.தன்யா குழுவினர் இறை வணக்கம் பாடினர்.மாணவி சஹானா வரவேற்புரையாற்றினார்.மாணவன் ஜெயராம் தவில் வாசித்தார்.மாணவி கேத்ரின் லோரிட்டா பரதம் ஆடினார்.மாணவி ரித்விகா நவராத்திரியின் மூன்றாம் நாளின் முக்கியத்துவம் பற்றி சிறப்புரையாற்றினார்.சடாயுவின் வீரம் பற்றி காளிபிரியா குழுவினர் நாடகம் நடத்தினர். மாலினி குழுவினர் பக்தி பாடல் பாடினர் இறுதியாக ராமலிங்கேஷ்வரி நன்றியுரையாற்றினார். பின் கொலுவிற்கு பூஜை செய்து பிரசாதம் வழங்கப்பட்டது. நவராத்திரி விழாவின் மூன்றாம் நாள் கொண்டாட்டத்திற்கு பாரத் கல்விக் குழுமத் தலைவர் மோகனகிருஷ்ணன் மற்றும் செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர்



**மருதடியூர் புனித அல்போன்ஸ் லிகோரியார் ஆலய திருப்பணிக்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் காணிக்கை வழங்கினார். உடன் தலைமை பொதுக்குழு உறுப்பினர் அருள் உட்பட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.**



**தென்காசி வடக்கு மாவட்ட இளைஞரணி பொறுப்பாளர்கள் மற்றும் பாகவாரியாக இளைஞர் அணி ஆலோசனை கூட்டம் மேலநீலிதநல்லூர் மேற்கு ஒன்றியத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தென்காசி வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் முகேஷ் தலைமை வகித்தார். மேற்கு ஒன்றிய செயலாளர் ராமச்சந்திரன் முன்னிலை வகித்தார். இதில் வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ராஜ், ராஜராஜன், ராயல் கார்த்திக் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், இளைஞரணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.**



**புரட்டாசி மாத மூன்றாவது சனிக்கிழமையான நேற்று தென்காசி பொருந்தி நின்ற பெருமாள் கோவிலில் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.**



**தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் இன்று (அக்.6) காலை நடைபெறும் மாபெரும் போதை ஒழிப்பு பேரணி மற்றும் பொதுக்கூட்டத்திற்காக அமைக்கப்பட்டுள்ள பிரமாண்ட மேடை ஏற்பாடுகளை வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேஷன் நிறுவனர் ஆனந்தன் அய்யாசாமி பார்வையிட்டார்.**

## எம்.பி. நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் திரளாக பங்கேற்க வேண்டும்: தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வே.ஜெயபாலன் அறிக்கை



**தென்காசி அக்.06:**
ஆலங்குளம் சட்டமன்ற தொகுதியில் இன்று திருநெல்வேலி பாராளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆலங்குளம் பேரூர் மற்றும் ஆலங்குளம் தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் இமாலய வெற்றியை பெற்று தந்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க இருப்பதால் தென்காசி தெற்கு மாவட்டத்தைச் ஒன்றிய, நகர, பேரூர், இளைஞரணி, மாணவரணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவரும் திரளாக கலந்து கொள்ள வேண்டும் இவ்வாறு தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் தெரிவித்துள்ளார்.



**தென்காசி மாவட்டத்திற்கு வருகை புரிந்த பொது நூலக இயக்குநரை தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை அலுவலர் ஒன்றியத்தின் சார்பில் மாநிலத் தலைவர் முத்துராமலிங்கம் தலைமையில் மரியாதை நிமித்தமாக சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர். உடன் மாநில துணை பொதுச் செயலாளர் வெற்றி வேலன், தென்காசி மாவட்ட தலைவர் பழனிஸ்வரன் மாவட்ட செயலாளர் சிவகுமார், தென்காசி வட்ட தலைவர் சுந்தர், செங்கோட்டை ராமசாமி, தென்காசி மாவட்ட மத்திய செயற்குழு உறுப்பினர் முத்துப்பாண்டியன், மாவட்ட துணை தலைவர் வீரகுமார், மகளிர் அணி செயலாளர் கிருஸ்டிபாய், திருநெல்வேலி மாவட்ட தலைவர் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்**

## பண்பொழி பெருமாள் கோவிலில் புரட்டாசி சனிக்கிழமை சிறப்பு வழிபாடு



செங்கோட்டை, அக், 06
செங்கோட்டை அருகே உள்ள பூமிநீளா சமேத ஶ்ரீசுந்தரராஜபெருமாள் கோவிலில் ஆண்டுதோறும் புரட்டாசி மாத சனிக்கிழமைகளில் சிறப்பு வழிபாடு நடைபெறுவது வழக்கம் இந்தாண்டு அதேபோல் று புரட்டாசி 3ஆம் சனிக்கிழமையை முன்னிட்டு பண்பொழி நாயுடு சமுதாயம் சார்பில் பூமிநீளா சமேத ஶ்ரீசுந்தரராஜ பெருமாள் மற்று பரிவார தேவதைகளுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடத்தப்பட்டு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பண்பொழி அதன் சுற்று வட்டார கிராமங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். ஏற்பாடுகளை விழாக்கமிட்டியினர் நாயுடு சமுதாய நிர்வாகிகள், பெரியோர்கள், இளைஞரணி நிர்வாகிகள் செய்திருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only



**புளியங்குடி - டிஎன் புதுக்குடி நகர மக்களின் நீண்டநாள் கோரிக்கையான சிதம்பர பேரி சமுத்திரம் ஓடைகால்வாயை தூர்வாரும் பணியை புளியங்குடி நகர்மன்ற தலைவர் விஜயா சௌந்தர பாண்டியன் தலைமையில் நகர்மன்ற துணைத் தலைவர், நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் திமுக நிர்வாகிகள் முன்னிலையில் நகராட்சி அதிகாரிகள், ஊழியர்கள் தொடங்கி வைத்தனர்.**

<u>சிவகிரி பேரூராட்சியில்</u>

## கோபால்ஸ் மேய்ச்சல் சமூகம் மற்றும் வன உரிமைச் சட்டம் குறித்த விழிப்புணர்வு கூட்டம்



**தென்காசி அக்.06:**
தென்காசி மாவட்டம் சிவகிரி பேரூராட்சியில் கோபால்ஸ் மேய்ச்சல் சமூகம் மற்றும் வன உரிமைச் சட்டம் விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வாய்ஸ் ஆப் தென்காசி பவுண்டேஷன் நிறுவனர் ஆனந்தன் அய்யாசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விவசாயம் மற்றும் கால்நடை மேய்ச்சல் குறித்தும் விவசாயிகளுக்கு தான் உற்பத்தி செய்யும் பொருள்களை மதிப்பு கூட்டுதல், கால்நடை கழிவுகளை ( சாணம்) வைத்து பொருள்களை சந்தைப்படுத்துதல் எவ்வாறு என வழிகாட்டினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோபால்ஸ் மேய்ச்சல் சமூகம் மற்றும் பாரதிய கிசான் சங்கத்தினர் செய்திருந்தனர்

## குற்றாலத்தை தென்காசி நகராட்சியுடன் இணைக்கும் முடிவை கைவிட வலியுறுத்தி அதிமுக சார்பில் மனு



**தென்காசி,அக்.06-**
உலகப் புகழ்பெற்ற சுற்றுலா தளமாகவும், சிறப்பு நிலை பேரூராட்சியாகவும் விளங்கும் குற்றாலத்தை, தென்காசி நகராட்சியுடன் இணைக்கும் திமுக அரசின் முடிவை கைவிட வலியுறுத்தி, தென்காசி மாவட்ட பொது மக்களிடமிருந்து வந்த ஒருமித்த கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக, தமிழ்நாடு அரசின் நகராட்சி நிர்வாக இயக்குனர் மற்றும் பேரூராட்சி இயக்குனர் ஆகியோரை, அதிமுக பொதுச்செயலாளர் புரட்சித்தமிழர் எடப்பாடியார் அவர்களின் ஆணைக்கிணங்க, தென்காசி வடக்கு மாவட்ட அதிமுக செயலாளரும், கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான ராஜா கிருஷ்ணமுரளி (எ) குட்டியப்பா எம்எல்ஏ குற்றாலம் பேரூர் கழக செயலாளரும், பேரூராட்சி மன்ற தலைவருமான கணேஷ் தாமோதரன் ஆகியோர் நேரில் சந்தித்து மனு அளித்தனர்...

# ராமநாதபுரம் மாவட்டத்தில் நெல் விதை பண்ணை அமைத்து லாபம் பெற வேளாண்துறை ஆலோசனை

**ராமநாதபுரம்,அக்.6-**
ராமநாதபுரம் மாவட்டத்தில் நெல் விதைப்பண்ணைகள் அமைத்து கூடுதல் லாபம் பெறலாம் என வேளாண்துறையினர்ஆலோசனை வழங்கி உள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் நெல் விதைப்பண்ணை அமைப்பதற்கு தேவையான வல்லுநர் விதை மற்றும் ஆதாரநிலை நெல் விதைகளை தங்கள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களிலும் பெற்றிடலாம். 51, 55 மற்றும் ஆடுதுறை 45 போன்ற குறுகிய கால விதை ரகங்கள் மற்றும் என் எல் ஆர் 34449, ஆர்.என்.ஆர் 15048 மற்றும் பிபிடி 5204 போன்ற மத்திய கால விதை ரகங்களை தேர்வு செய்யலாம். விதைப்பண்ணை அமைப்பதற்கு முன் விதைப்பண்ணை விவசாயிகள் விதைகளை விதை நேர்த்தி செய்து விதைப்பது மிகவும் அவசியமான ஒன்றாகும். உயிர் எதிர் பூசனக்கொல்லி மருந்தான சூடோமோனாஸ் புளூரோசன்ஸ் பாக்டீரியாவை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்யலாம்.

பூஞ்சானகொல்லி விதை நேர்த்தி செய்த 24 மணி நேரத்திற்கு பிறகு அசோஸ்பைரில்லம் விதை நேர்த்தி செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு தேவையான விதையுடன் 2 பாக்கெட் 400 கிராம் அசோஸ்பைரில்லத்துடன் கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். விதை நேர்த்தி செய்வதால் விதை முளைப்புத்தன்மை அதிகப்படுத்தப்படுகிறது. விதை மற்றும் மண் மூலம் பரவும் நோய்க் கிருமிகள் மற்றும் பூச்சிகளிலிருந்து முளைக்கும் விதைகளைப் பாதுகாக்கிறது.

விதை உற்பத்தியாளர்கள் விதைத்த 35 நாட்கள் அல்லது பூப்பதற்கு 15 நாட்கள் முன்னதாக விதைப்பண்ணைகளை ஸ்பெக்ஸ் இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யப்பட்ட விதைப் பண்ணை அறிக்கை பதிவிறக்கம் செய்து 3 நகல்களுடன் ராமநாதபுரம் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்ம சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும்.

விதைப்பண்ணை அமைக்க விதைச்சான்று கட்டணமாக ஒரு ஏக்கருக்கு ஒரு விதைப்பு அறிக்கைக்கு பதிவுக்கட்டணம் ரூ.25-ம், வயலாய்வு கட்டணமாக ரூ.100-ம் விதை பரிசோதனை கட்டணமாக ரூ.80-ம் செலுத்த வேண்டும்.

விதைத்த 35ம் நாள்அல்லது பயிர் பூப்பதற்கு 15 நாட்கள் முன்பு இதில் எது முன்னதோ அதற்குள் பதிவு செய்ய வேண்டும்.

பதிவு செய்த விதைப் பண்ணைகள் பூக்கும் தருணத்திலும், முதிர்ச்சி பருவத்திலும் விதைச்சான்று அலுவலரால் வயலில் ஆய்வு செய்து வயல் தரம் மற்றும் விதைத்தரம் குறித்து பரிந்துரைக்கப்பட்ட தரம் இருந்தால் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்ட வயல்மட்ட விதைகளுக்கு விதை சுத்தி அறிக்கை வழங்கப்படுகிறது. விதைப்பண்ணையில் உற்பத்தி செய்யப்படும் வயல் மட்ட விதைகள் அரசால் அங்கீகாரம் செய்யப்பட்ட விதை சுத்திகரிப்பு நிலையத்தில் கழிவுகள் நீக்கி சுத்தி விதைகள் பிரிக்கப்படுகிறது. சுத்திகரிக்கப்பட்ட விதை குவியல்களில் விதை மாதிரி எடுக்கப்பட்டு விதைப் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பப்பட்டு பகுப்பாய்வில் தேறிய விதைக்குவியலுக்கு சான்றட்டைகள் பொருத்தப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. டான்சிடா திட்டத்தின் மூலம் குறைந்தபட்ச ஆதரவு விலையைவிட கூடுதலாக சான்று பெற்ற விதைகளை கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே விவசாயிகள் விதைப்பண்ணை அமைத்தால் விதை உற்பத்தி மானியம் மூலம் கூடுதல் லாபம் பெறலாம். இந்த தகவலை ராமநாதபுரம் மாவட்ட விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் சி.சிவகாமி தெரிவித்துள்ளார்.

# இளைஞர் நீதிக்குழுமத்தில் வேலைவாய்ப்பு: ராமநாதபுரம் கலெக்டர் சிம்ரன்ஜீத்சிங் தகவல்

**ராமநாதபுரம், அக். 6-**
ராமநாதபுரம் மாவட்ட இளைஞர் நீதிக்குழுமத்தில் காலியாக உள்ள உதவியாளருடன் உடன் இணைந்த கணினி இயக்குபவர் ஒரு பணியிடத்திற்கு முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் மாதம் ரூ.11,916- ஊதியத்தில் பணிபுரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. கல்வி தகுதி : 10-ம் வகுப்பு, 12-ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் தமிழ், ஆங்கிலத்தில் தட்டச்சு முதுநிலை சான்றிதழ்களும், கணினி இயக்க பயிற்சியுடன் முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். வயது வரம்பு 42 வயதிற்குள் ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். இப்பணிக்கான விண்ணப்ப படிவம் www.ramnanathapuram.nic.in என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் அல்லது மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம், பூர்த்திசெய்த விண்ணப்பங்களை உரிய சான்றிதழ்களுடன் இணைத்து மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் மாவட்ட நீதி மன்றம் தென்புறம், ராமநாதபுரம் - 623 503 என்ற முகவரிக்கு 15.10.2024 அன்று மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு 04367-231098 (அ) 04567-299956 என்ற தொலைபேசி எண்ணிற்கு தொடர்புக்கொள்ளலாம்.

இந்த தகவலை ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜீத் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

# உலக இதய தினத்தை முன்னிட்டு இதயம் சார்ந்த சவால்களை எதிர்கொள்ள மருத்துவ நிபுணர்களின் ஒருங்கிணைந்த முயற்சி

**கோவை, அக் 06-**
இந்தியாவில் இதய நோய்கள் தொடர்ந்து அதிகரித்து வரும் சூழலில், இதய நலன் குறித்த விழிப்புணர்வையும், மேம்பட்ட மருத்துவ சிகிச்சைகளின் முக்கியத்துவத்தையும் நாடு முழுவதும் பெரிதளவில் கொண்டு சேர்ப்பது அவசியமாகும். இந்த ஆண்டு உலக இதய தினத்தில், இதயத்தை பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்கிற மையக்கருத்துடன் மக்களிடையே இதய ஆரோக்கியத்தை மேம்படுத்த அவசியமான உத்திகள் மற்றும் சிகிச்சை முறைகள் பற்றி எடுத்துரைத்து விழிப்புணர்வு ஏற்படுத்த முன்னணி சுகாதார நிபுணர்கள் ஒன்றிணைந்துள்ளனர். பொதுவாக இதய நோய்கள் கார்டியோ வாஸ்குலர் நோய்கள் எனப்படும். இதயம் மற்றும் இரத்த நாளங்களை பாதிக்கும் நோய்களே உலகளவில் அதிக மக்களின் இறப்புக்கும் முக்கிய காரணங்களாக உள்ளன. இவற்றில், குறிப்பாக 'வால்வுலர் இதய நோய்' தான் உலகளவில் இதய பாதிப்பிற்கும், இறப்பிற்கும் கணிசமாக பங்களிக்கிறது.

இதயத்தின் கீழ் இடது சேம்பர் மற்றும் அவொர்டா நேரோஸ் என்கிற இதயக் குழாய்க்கும் இடையிலான வால்வு சுருங்கி, முழுமையாக திறக்காத போது அவொர்டிக் ஸ்டெனோசிஸ் எனப்படும் பொதுவான இந்த வால்வுலர் இதய நோய் ஏற்படுகிறது. ஏஎஸ் பாதிப்பின் சாத்தியக்கூறுகள் வயதுக்கு ஏற்ப அதிகரிக்கிறது.. இந்தியாவில், 2021 மற்றும் 2031-ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் வயதானவர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 138 முதல் 194 மில்லியனாக அதிகரித்துள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மும்பை எஸ்.எல்.ரஹேஜா மருத்துவமனையின், இன்டர்வென்ஷனல் & ஸ்ட்ரக்ச்சுரல் ஹார்ட் துறையின் இயக்குனர், டாக்டர் ஹரேஷ் மேத்தா கூறுகையில், மக்கள் பெரும்பாலும் அவொர்டிக் ஸ்டெனோசிஸ் பாதிப்பினைக் கண்டறியும் பரிசோதனைகளை மேற்கொள்வதில்லை, ஏனெனில் இந்த நோய் பெரும்பாலும் அதன் ஆரம்ப கட்டங்களில் குறிப்பிடத்தக்க அறிகுறிகளை வெளிப்படுத்தாது; சோர்வு போன்ற அன்றாட செயல்பாடுகளை பாதிக்கும் வழக்கமான வயோதிக அறிகுறிகளை மட்டுமே வெளிப்படுத்தும் என்று கூறினார்.

# மதுரையில் 9-ம் தேதி நடைபெறும் அ.தி.மு.க. உண்ணாவிரத போராட்டம் தமிழ்நாட்டில் திருப்புமுனையை ஏற்படுத்தும்

## முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் உறுதி


**திருமங்கலம், அக். 06-**
அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடியாரின் ஆணைக்கிணங்க, தி.மு.க. அரசை கண்டித்து மதுரையில் வரும் 9-ம் தேதி மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் அம்மா பேரவையின் சார்பில், முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் நடைபெறுகின்றது.இதனை தொடர்ந்து டி.குன்னத்தூர் அம்மா கோவிலில் உண்ணாவிரதத்தில் பங்கேற்கவுள்ள இளைஞர்களுக்கான பயிற்சி முகாம் மூன்றாவது நாளாக நேற்று நடைபெற்றது.இதில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இதற்கான ஏற்பாடுகளை கள்ளிக்குடி ஒன்றிய செயலாளர்கள் வேப்பங்குளம் கண்ணன், உலகாணி ராமையா, பிரபு சங்கர் ஆகியோர் செய்திருந்தனர்.

அப்போது முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேசியதாவது: கடந்த சட்டமன்ற தேர்தலில் 520 தேர்தல் வாக்குறுதியை தி.மு.க. அதை நிறைவேற்றவில்லை. அத்துடன் கடந்த அம்மா ஆட்சி காலத்தில் வழங்கப்பட்டு வந்த அனைத்து திட்டத்தையும் நிறுத்தி விட்டார்கள். அம்மா ஆட்சி காலத்தில் மடிக்கணினி திட்டத்தை வழங்கி உலகமே திரும்பி பார்க்கும் வகையில் தமிழகத்தை உயர்த்தினார்கள்.ஆனால் மடிக்கணினி தவழும் மாணவர்கள் கரங்களில் போதை பொருள்கள் நடமாடுகிறது. இது ஒரு புறம் இருக்க, தற்போது தமிழகத்தில் கடுமையான விஷக் காய்ச்சல் பரவி வருகிறது. இதற்கு அரசு மருத்துவமனைகளில் மருந்து கூட இல்லை. .எடப்பாடியாரின் ஆணைக்கிணங்க தி.மு.க. அரசை கண்டித்து வருகின்ற 9-ம் தேதி மாபெரும் மதுரையில் உள்ள பழங்காநத்தம் எம்.ஜி.ஆர் திடலில் மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் நடைபெறுகிறது. இந்த உண்ணாவிர போராட்டம் தமிழகத்தில் மாபெரும் திருப்புமுனையை ஏற்படுத்திடும் என்று பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் உசிலை மகேந்திரன், தமிழரசன், சரவணன், ராஜவர்மன், கருப்பையா, சதன் பிரபாகரன், மாவட்ட பொறுப்பாளர் தண்டரை மனோகரன், மாநில நிர்வாகிகள் வெற்றிவேல், புளியங்குளம் ராமகிருஷ்ணன், சிவசுப்பிரமணியன், மாவட்ட நிர்வாகிகள் வக்கீல் தமிழ்ச்செல்வம், வக்கீல் திருப்பதி, ஒன்றிய செயலாளர் அன்பழகன்,மாவட்ட அணி நிர்வாகிகள் பேரையூர் ராமகிருஷ்ணன்,சரவணபாண்டி, பாஸ்கரன், கட்சி நிர்வாகிகள் உலகாணி அன்னமுத்து, ரமேஷ், கந்தசாமி, ரவி, சரவணன், முரளிதரன், முனியாண்டி, விஜி,உட்பட பலர் கலந்து கொண்டனர்.முகாமின் நிறைவில் கள்ளிக்குடி ஒன்றிய கவுன்சிலர் ஆதி (எ) ராஜா நன்றி கூறினார்.

# புரட்டாசி 3-வது வாரம்: போடி ஸ்ரீநிவாச பெருமாள் வைகுண்டநாதர் அலங்காரத்தில் அருள் பாலித்தார்

**போடி, அக். 6-**
தேனி மாவட்டம் போடி நாயக்கனூரில் புரட்டாசி 3 ஆவது சனிக்கிழமையை முன்னிட்டு வைகுண்டநாதர் அலங்காரத்தில் ஸ்ரீநிவாசப் பெருமாள் அருள்பாலித்தார். போடி ராமர் கோவிலிலும் சிறப்பு பூஜை நடைபெற்றது.



புரட்டாசி சனிக்கிழமைகளில் பெருமாள் கோயில்களில் சிறப்பு பூஜை நடைபெறுவது வழக்கம். போடியில் உள்ள இந்து சமய அறநிலையத் துறைக்கு பாத்தியப்பட்ட அருள்மிகு ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயிலில் புரட்டாசி 3 ஆவது வார சனிக்கிழமை பூஜை நடைபெற்றது. இதில் ஸ்ரீநிவாசப் பெருமாள் வைகுண்டநாதர் அலங்காரத்தில் அருள்பாலித்தார். இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் அதிகாலை முதலே நீண்ட வரிசையில் காத்திருந்து ஸ்ரீநிவாசப் பெருமாளை தரிசித்தனர். பெருமாளுக்கு தீபமேற்றியும், சர்க்கரை பிரசாதம் வழங்கியும் வழிபட்டனர். புரட்டாசி சனிக்கிழமையை முன்னிட்டு கோயில் முழுவதும் வண்ண விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. பூஜை ஏற்பாடுகளை கோவில் தலைமை அர்ச்சகர் சீனிவாச வரதப்பட்டாச்சாரியார் என்ற கார்த்திக் மற்றும் கட்டளைதாரர்கள் செய்தனர்.

போ.நாகலாபுரம் கெஞ்சம்பட்டியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ பாமா ருக்மணி சமேத கள்ளழகர் சுவாமி திருக்கோவிலில் சிறப்பு பூஜை நடைபெற்றது. போடி வினோபாஜி குடியிருப்பில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலில் உள்ள சங்கரநாராயணன் சன்னதியில் சுவாமிக்கு தங்க காப்பு அலங்காரம் செய்யப்பட்டு வழிபாடு நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கான பெண்கள், பக்தர்கள் பங்கேற்று வழிபாடு நடத்தினர். போடி போஸ்பஜார் அருள்மிகு ஸ்ரீராமர் கோயிலில் புரட்டாசி சனி வார பூஜை நடைபெற்றது. ஸ்ரீராமர், லட்சுமணன், சீதாதேவி, அனுமன் ஆகியோருக்கு சிறப்பு பூஜை செய்து பொங்கல் வைத்து வழிபாடு நடத்தப்பட்டது.

போடி ஜக்கமநாயக்கன்பட்டி, மேலச்சொக்கநாதபுரம் ஆகிய இடங்களில் உள்ள அருள்மிகு தொட்டராயர் ஒன்னம்மாள் திருக்கோயிலில் புரட்டாசி 3 ஆவது சனிக்கிழமையை முன்னிட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது. சிலமலை அருள்மிகு ஸ்ரீநிவாசப் பெருமாள் கோயில், தேவாரம் அருள்மிகு ரெங்கநாதர் திருக்கோயில் உள்ளிட்ட கோயில்களிலும் புரட்டாசி 3 ஆவது சனி வார பூஜை சிறப்பாக நடைபெற்றது.

# நத்தத்தில் பொதுமக்களுக்கு போலீசார் விழிப்புணர்வு



**நத்தம், அக். 06-**
திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் அறிவுறுத்தலின் பேரில் நத்தத்தில் குற்றச் சம்பவங்களை தடுப்பது குறித்த விழிப்புணர்வு முகாம் நடந்தது. இதற்கு போலீஸ்-இன்ஸ்பெக்டர் தங்கமுனியசாமி தலைமை தாங்கினார். சப்-இன்ஸ்பெக்டர் அருண்குமார் முன்னிலை வகித்தார்.

இதில் சி.சி.டி.வி கேமராக்கள் அமைப்பதன் அவசியம் பற்றியும், சாலை பாதுகாப்பு, போக்குவரத்து விதிகளை பின்பற்றுதல் குறித்தும், குற்றச் சம்பவங்களை தடுப்பது பற்றியும் போதைப் பொருட்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் பற்றியும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி பேசப்பட்டது.

இதில் காவல்துறையினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



புரட்டாசி மாதம் 3-வது சனிக்கிழமையையொட்டி மதுரை பாத்திமா கல்லூரி அருகே உள்ள நரசிங்கப் பெருமாள் என்ற வழிவிடும்பெருமாள் ஸ்ரீராமர்அலங்காரத்தில்பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

# கலசலிங்கம் பல்கலை.யில் சர்வதேச காபி தின விழா




**விருதுநகர், அக். 6-**
ஸ்ரீவில்லிபுத்தூர், கலசலிங்கம் பல்கலையில், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை கல்லூரி சார்பில் சர்வதேச காபி தின விழா வேந்தர் கே. ஸ்ரீதரன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு துணைத்தலைவர் முனைவர் எஸ் .சசி ஆனந்த் , துணை வேந்தர் முனைவர் எஸ்.நாராயணன், பதிவாளர் முனைவர் வி.வாசுதேவன் முன்னிலை வகித்தனர். கல்லூரி முதல்வர் எட்வர்ட் ஜார்ஜ் அனைவரையும் வரவேற்று பேசினார். தாண்டிகுடி,மண்டல காப்பி ஆராய்ச்சி நிலைய இயக்குநர், எம். ஜெயக்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு,வினாடி வினா,ஓவியம் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசு சான்றிதழ்களை வழங்கினார். துறைத் தலைவர்கள் பி.பாண்டியராஜ்,.கண்ணன். சாஹிர் வாழ்த்துரை வழங்கினர். விழா ஏற்பாடுகளை பேராசிரியர்கள் கண்ணபிரான், ஜெயப்பிரபா , சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். நிகழ்ச்சியில் பல்கலைக் கழக பேராசிரியர்கள் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

# திருமங்கலம் அருகே காட்டுப் பன்றிகளால் மக்காச் சோள பயிர்கள் சேதம்: விவசாயிகள் வேதனை



**திருமங்கலம், அக். 06-**
திருமங்கலம் அருகே கிராமத்து விளைநிலங்களில் காட்டுப்பன்றிகள் நுழைந்து மக்காகச் சோளம் உள்ளிட்ட பல்வேறு பயிர்களை சேதப்படுத்தி வருவதால் விவசாயிகள் பெரிதும் வேதனையடைந்துள்ளனர்.

திருமங்கலம் அருகேயுள்ள அம்மாபட்டி,பன்னிக்குண்டு, நக்கலக்கோட்டை, தங்களாச்சேரி, வலையபட்டி, சௌடார்பட்டி.கிழவனேரி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் தற்போதுமக்காச் சோளம்,பாசிப்பயிறு உளுந்து, இரும்புச் சோளம் போன்ற பயிர்களை அதிகளவில் பயிரிட்டுள்ளனர்.இந்நிலையில் மேற்கண்ட பகுதிகளில் உள்ள கண்மாய்களின் புதர்களில் ஏராளமான காட்டுப் பன்றிகள் வந்து பதுங்கியுள்ளன.

பகல் முழுவதிலும் கண்மாய்க்குள் பதுங்கியிருக்கும் இவைகள் இரவில் உணவுதேடிஅருகிலுள்ள விளைநிலங்களில் நுழைந்து பயிர்களையும் செடி கொடிகளையும் தின்று நாசம் பண்ணி வருகின்றன.இதனால் பல்வேறு சோதனைகளுக்கு மத்தியில் விவசாயம் செய்துள்ள விவசாயிகள் விளைந்து நிற்கும் தங்களது பயிர்களை இரவிலே உலாவரும் காட்டுப் பன்றிகள் கூட்டம் கூட்டமாக வந்து சேதப்படுத்துவதை கண்டு செய்வதறியாமல் திகைத்து வருகின்றனர்.

குறிப்பாக காட்டுப்பன்றிகள் விளைநிலங்களை தலைகீழாக புரட்டிப் போட்டு சேதப்படுத்துவதும் பயிர்களை தின்று நாசம் செய்வதும் அன்றாட நிகழ்வுகளில் ஒன்றாகி விட்டது. மேற்கண்ட பகுதிகளில் காட்டுப் பன்றிகளின் அட்டகாசம் தொடர்ந்து வருவது விவசாயிகளின் பொருளாதாரத்தை பெரிதும் பாதித்து பெரும் வேதனையில் ஆழ்த்தி உள்ளது.இதனை தடுத்திடும் வகையில் விவசாயிகள் தங்களது தோட்டங்களில் உயரமான மேடை அமைத்து அதன் மீது இரவு முழவதும் அமர்ந்து தங்களது விளைநிலங்களை காவல் காத்திடுவதும், பன்றிகள் வரும் சமயத்தில் பட்டாசுகளை வெடித்து அவற்றை விரட்டுவதும் தொடர்கதையாகி விட்டது.எனவே காட்டு பன்றிகளால் விளைந்து நிற்கும் பயிர்கள் சேதமடைவதை தடுத்திடும் வகையில்வனத்துறை அதிகாரிகளும்,வேளாண் அதிகாரிகளும் உடனடி நடவடிக்கை எடுத்திட வேண்டும்.பயிர்கள் பாதிப்பினை கணக்கீடு செய்து தமிழக அரசு உரிய இழப்பீடு வ ழங்கிட வேண்டும் எனவும் இப்பகுதி விவசாயிகளின் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்




மக்கள் நலன் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்த ஒரு முக்கிய முயற்சியாக, மெட்வே மருத்துவமனை துப்புறது தப்பு என்ற விழிப்புணர்வு பரப்புரையை துவங்கியுள்ளது. பொது இடங்களில் பொறுப்பின்றி, துப்புவதால் ஏற்படும் தீவிர சுகாதார இடர்களைப் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் துவங்கப்பட்ட இந்த பரப்புரை, சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கும் இலக்கினை கொண்டுள்ளது.

# வள்ளலார் ஜெயந்தி விழாவை முன்னிட்டு திருப்பரங்குன்றத்தில் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



**திருப்பரங்குன்றம், அக் 06-**
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க. வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடி நின்றேன் என்ற உயரிய கொள்கைகளை உலகிற்கு உணர்த்திய வள்ளலார் பிறந்த தினத்தையொட்டி நேற்று திருப்பரங்குன்றம் சன்னதி தெரு 16 கால் மண்டபத்தின் அருகே உள்ள வள்ளலார் திருவுருவப்பத்திற்கு தொன்மை பாதுகாப்பு அறக்கட்டளையின் சார்பாக சுவாமிவிவேகானந்தர் இளைஞர் பேரவையின் தலைவர் ப. லெட்சுமணன் தலைமையில் மாலைஅணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதைத்தொடர்ந்து தொன்மை பாதுகாப்பு அறக்கட்டளையின் பொதுச்செயலாளர் கவிஞர் ப.மோகன்தாஸ் பொதுமக்களுக்கு இனிப்பு மற்றும் வெண்பொங்கல், வடை பிரசாதாங்களை வழங்கினார்.

நிகழ்வில் எம்.சௌந்தரம், எஸ்,அக்பர்அலி, ஆட்டோ முருகன், சரவணன்,சிவா,மற்றும் பலர்கலந்து கொண்டனர்.

